# கீழக்கரை நகர்மன்ற 29.10.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் –1**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள 7.5 KVA Online UPS பழுது நீக்கம் (Full service) மற்றும் புதிதாக 12 எண்ணம் மின்கலன்கள் (12V 110 AH TUBULAR Battery) மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் விநியோகம் செய்து பொருத்தி கொடுக்கும் பணி செய்வதற்குரிய மதிப்பீடு ரூ.1,90,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 16.09.2020–ந் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 09.10.2020–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2020–2021** | | | | |
| 1. | இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள 7.5 KVA Online UPS பழுது நீக்கம் (Full service) மற்றும் புதிதாக 12 எண்ணம் மின்கலன்கள் (12V 110 AH TUBULAR Battery) மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் விநியோகம் செய்து பொருத்திக் கொடுக்கும் பணிகள். | 1.90 | இராமநாதபுரம் ஜெனரேட்டர்ஸ், 15/எப்–4, ஜி.ஹெச். ரோடு, இராமநாதபுரம் | ரூ. 1,76,185/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.30% குறைவு |
| | | | என்.எஸ். பேட்டரிஸ், 320/சி/10 பி.1 காவல் நிலையம் அருகில், ஜி.ஹெச். ரோடு, இராமநாதபுரம் | ரூ. 1,79,361/– விலைவிகிதத்தினை காட்டிலும் 1.50% கூடுதல் |

**(கோப்பு எண். 364/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. இராமநாதபுரம் ஜெனரேட்டர்ஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## தீர்மானம் எண்.781 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –2**

தமிழக அரசின் வறுமை கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு புரட்சித்தலைவி அம்மா ஒருங்கிணைந்த விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு செய்து காப்பீடு வழங்க அரசாணை எண் GO(MS) No: 273 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை நாள் 04.06.2020–ன்படி உத்திரவிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 12635 /2020/ UPA3–1 நாள் 28.08.2020–ன் படி கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 4765 குடும்பங்களை கணக்கெடுப்பு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான படிவங்கள் பதிவிறக்கம் செய்யவும் படிவங்கள்

எழுதுபொருட்கள் வாங்கிடவும் மற்றும் ஊதியம் வழங்கிடவும் உத்தேச செலவினம் ரூ 5,00,000/– மன்ற அனுமதி பெறும் பொருட்டு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

(எச்1 /117/2019)

அலுவலக குறிப்பு

1. அரசாணை எண் GO(MS) No: 273 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை நாள் 04.06.2020 –ன் படி உத்திரவிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 12635 /2020/ UPA3–1 நாள் 28.08.2020–ன் படி பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

2. அதற்கான உத்தேச செலவினம் ரூ 5,00,000 த்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.782 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் –3

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமம் காட்டுப்பள்ளியில் தங்கியிருக்கும் கேரளா மற்றும் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த சுமார் 700க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கோவிட்–19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ள நிலையில், உணவின்றி தவித்து வருவதால் கீழக்கரை நகர் பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தினசரி உணவு கட்டணங்கள் செலுத்தி மேற்கண்ட நபர்களுக்கு உணவுகள் தயார் செய்து வழங்குமாறு கீழக்கரை, நிஷா பவுன்டேசன் 24.03.2020 மற்றும் 31.03.2020–ந் தேதிய விண்ணப்பம் மற்றும் இராமநாதபுரம் உதவி ஆட்சியர் அவர்களின் ந.க.அ9/1963/2020, நாள். 11.04.2020ந்தேதிய உத்திரவின்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் உணவுகள் தயார் செய்து வழங்குவதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி உள்ளூர் விலை விகிதத்தில் வாங்கி பயன்படுத்துமாறு, இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு. ஆர். சிவசங்கர் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 01.08.2020 முதல் 17.08.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை வாங்கி கொடுத்த வகைக்கு ரூ.71,655/– மட்டும் வழங்க கோரியுள்ளார்.

| வ.எண். | நாள் | தயார் செய்த உணவு வகை | | காய்கறிகள் வாங்கிய அளவு கிலோ/கிராம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | இட்லி சாம்பார் | சாதம் | | |
| 1. | 01.08.2020 | 0 | 0 | 0 | 0 |
| 2. | 02.08.2020 | 2000 | 800 | 80.500 | 4665 |
| 3. | 03.08.2020 | 1500 | 600 | 60.100 | 3420 |
| 4. | 04.08.2020 | 1500 | 700 | 70.000 | 3770 |
| 5. | 05.08.2020 | 1500 | 800 | 80.500 | 4665 |
| 6. | 06.08.2020 | 1500 | 800 | 80.600 | 4555 |
| 7. | 07.08.2020 | 1500 | 800 | 80.500 | 4705 |
| 8. | 08.08.2020 | 1500 | 800 | 80.500 | 4705 |
| 9. | 09.08.2020 | 1500 | 800 | 80.600 | 4560 |
| 10. | 10.08.2020 | 1500 | 800 | 80.600 | 4560 |
| 11. | 11.08.2020 | 1500 | 800 | 80.500 | 4665 |
| 12. | 12.08.2020 | 1500 | 800 | 80.500 | 4395 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | 13.08.2020 | 1500 | 800 | 80.500 | 4665 |
| 14. | 14.08.2020 | 1500 | 800 | 80.500 | 4395 |
| 15. | 15.08.2020 | 1500 | 800 | 80.600 | 4560 |
| 16. | 16.08.2020 | 1500 | 800 | 80.500 | 4705 |
| 17. | 17.08.2020 | 1500 | 800 | 80.500 | 4665 |
| **மொத்தம்** | | **24500** | **12500** | **1257.5** | **71655** |

மேற்காணும் விவரப்படியான தொகை ரூ.71,655/– மட்டும் இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 01.08.2020 முதல் 17.08.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை வாங்கி கொடுத்த வகைக்கு அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு ரூ.71,655/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.783 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் –4**

தலைமை செயலாளர், போக்குவரத்து துறை மற்றும் மாநில கண்காணிப்பாளர் அவர்களின் 09.10.2020–ந் தேதி வடகிழக்கு பருவமழை 2020–ன் ஆய்வுக்கூட்ட உத்திரவின்படியும் மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் ந.க.எண் 24614/2020/ஆர்2 நாள் 10.10.2020–ன் படியும் உள்ள உத்திரவின் படி வடகிழக்கு பருவமழை 2020 எதிர்நோக்கி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கு கீழக்கரை நகர் மக்களின் பாதுகாப்பு ஏற்பாடு செய்வதற்கும் கீழக்கரை நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணிகளில் பயன்படுத்தப்படும் தளவாடப்பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி இருப்பில் வைத்துக்கொண்டு உரிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்கண்ட தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழஙகிடுமாறு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. மேற்படி தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 10,00,000/– ஆகும் இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1.எதிர்வரும் வடகிழக்கு பருவமழை எதிர்நோக்கி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பொதுசுகாதார பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 10,00,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.784 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் —5</u>**

அரசாணை நிலை எண் 306 (நிதித்துறை) நாள் 13.09.2017 —ன் படி கீழக்கரை நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 2020—2021—ம் ஆண்டிற்கு சீருடைகள் வாஙகுவதற்கும் மற்றும் அதற்கான தையற்கூலி வழஙகவும் உத்தேச செலவீனம் ரூ 2,00,000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

உத்தேச செலவீனம் ரூ 2,00,000/—க்கு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.785 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் —6</u>**

கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணிகளின்போது பயன்படுத்தப்படும் மூன்றுசக்கர சைக்கிள் பழுதடைந்து உள்ளதால் துப்புரவு பணியாளர்கள் பணிகளை மேற்கொள்ள கஷ்டமாக உள்ளதால் அவைகளுக்குரிய மூன்றுசக்கர சைக்கிள் உதிரிபாகஙகள் வாஙகி பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு 05.10.2020—ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | மூன்று சைக்கிள் வண்டி எண்ணம் | விலையின் விகிதம் (1 வண்டிக்கு) | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை | விகாஸ் ஏஜென்ஸி மதுரை | ஆர்.எஸ்.கே.ஏஜென்ஸிஸ் ஸ்ரீரஙகம், திருச்சி |
| 1 | 30 | (ஜி.எஸ்.டி, கூலி உட்பட) | 24980 | 26120 | 27030 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மூன்றுசக்கர சைக்கிள் உதிரிபாகங்கள் வாங்கி பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.786 அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள் –7</u>

கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணிகளின்போது பயன்படுத்தப்படும் பேட்டரியில் இயங்கும் வண்டி பழுதடைந்து உள்ளதால் துப்புரவு பணியாளர்கள் பணிகளை மேற்கொள்ள கஷ்டமாக உள்ளதால் அவைகளுக்குரிய பேட்டரியில் இயங்கும் வண்டி உதிரிபாகங்கள் வாங்கி பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு **06.10.2020**–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | வாகனத்தின் பெயர் | விலையின் விகிதம் (1 வண்டிக்கு) | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | கிரினெட்டிக்ஸ் இன்டஸ்டிரிஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை | ஈஸ்வர் மோட்டார்ஸ், பரமக்குடி | ஏசியன் பவர் லைன்ஸ், பரமக்குடி |
| 1 | BOV | (ஜி.எஸ்.டி, கூலி உட்பட) | 7350 | 7586 | 7822 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள கிரினெட்டிக்ஸ் இன்டஸ்டிரிஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

2. இந்நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பேட்டரியில் இயங்கும் வண்டி உதிரிபாகங்கள் வாங்கி பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.787 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் –8</u>**

கீழக்கரை நகராட்சியின் 2019–2020ம் ஆண்டு வருவாய் மூல நிதி கணக்குகள் மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகளுக்கான தணிக்கை அறிக்கை இராமநாதபுரம் உள்ளாட்சி நிதித்தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.465/அ1/2020 நாள்.30.09.2020–ன்படியானது 14.10.2020–ந் தேதி பெறப்பட்டது. மேற்கண்ட தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கவும் மேலும் தணிக்கை அறிக்கை பத்தி எண். 44–ல் குறிப்பிட்டுள்ள தணிக்கை கட்டணம் ரூ.63,756/– மட்டும் அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**<u>(கோப்பு எண். 216/2020/இ1)</u>**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. 2019–2020–ம் ஆண்டு தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தணிக்கை கட்டணம் ரூ.63,756/–மட்டும் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.788 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**